திரு. கே. போஜன் : சென்னை நகரத்தில் அமைத்திருக்கும் மிருகக் காட்சி சாலையைப் போல் நம் மாநிலத்திலுள்ள மாவட்டங்களின் தலைநகரங்களில் தொடங்குவதற்குத் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அப்படிப்பட்ட எண்ணம் எதுவும் இல்லை.

ஏற்காட்டிலுள்ள நாகனூர்—டேனிஸ்பேட்டை சாலை

*67 வினா.—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை பளிப்பாரா—

(அ) சேலம் ஜில்லா ஏற்காடு மலைப் பகுதியில் மலை வாசிகள் நலனுக்காக போடப்பட்ட நாகனூர்—டேனிஸ்பேட்டை ரோடு பூர்த்தியாய் விட்டதா ?

(இ) இல்லையெனில் அதற்கான காரணம் என்ன ?

(உ) எப்போது பூர்த்தி செய்யப்படும் ?

(எ) அந்த ரோடுக்காக ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) எல்லாவற்றிலும் வேண்டும் அளவிற்கேற்றபடி அது இன்னும் முடிக்கப்படவில்லை.

(இ) சாலை வேலைகளை நிறைவேற்றுவதில் நடந்ததாகக் கூறப் படுகிற முறைகேடான செயல்கள் குறித்து செய்யப்பட்ட சிறு குற்றச்சாட்டுகளை கண்காணிப்பு-லஞ்ச ஊழல் ஒழிப்புத் துறை துப்புத் துலக்கி வருகிறது. அது முடிகிற வரையில் மேற்கொண்டு வேலை நிறைவேற்றப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது.

(உ) அதைச் சரிவர இப்போதே முன்கூட்டிக் கூற இயலாது.

(எ) குறிப்பிட்ட வேலைகளுக்காகவென்று குறிப்பாக எந்த நிதி ஒதுக்கமும் செய்யப்படுவதில்லை.

பி.ப. 10-00 திரு. எம். சுரேந்திரன் : இந்த ரோடு வேலையில் பல ஊழல்கள் நடந்து அங்கு சிறுசிறு கண்ட்ராக்டர்களாக வேலை செய்தவர் களுக்குப் பணம் வந்து சேரவில்லை என்று புகார் வந்திருக்கிறது. அந்த சிறு சிறு கண்ட்ராக்டர்களின் கஷ்டங்களை உணர்ந்து சீக்கிரம் அதைத் தீர்க்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அந்தப் பிரச்சினைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தார்கள். அதன்படி அவர்கள் கேட்ட ரூ. 1,50,000 ஒரு முறை கொடுக்கப்பட்டு அது அவர்களுக்கு விநியோகிக்கப் பட்டது. மேற்கொண்டும் ரூ. 5,50,000 வேண்டுமென்று கேட்டு அதுவும் கொடுக்கப்பட்டது. ஆனால் அவைகளைக் கொடுப்பதற்கு இப்போது ‘ செக் மெஷர்மென்ட் ’ கணக்குகள் எல்லாம், லஞ்ச ஒழிப்புத் துறையால் எடுத்துச் செல்லப்பட்டிருப்பதால் அது முடிகிற வரையில் அதைக் கொடுக்கக் கூடாது என்று அந்தத் துறையிலிருந்து வந்த அறிவுரைப்படி கொடுக்காமல் நிறுத்தப் பட்டது. அது கிடைத்தவுடன் அது முறைப்படி வழங்கப்படும்.